**தலைப்பு 283 – வனவள பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனவள பாதுகாப்புத் திணைக்கள நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்வதற்கு முடியாதுள்ளது.

(ஆ) வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று** | | |
| 2017 ஜுலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் விடய இலக்கம் 283011 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அவை 01 மாதமும் 24 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 24 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்கம் கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்கான கணக்கு களை இணக்கஞ் செய்வதில் தாமதம் ஒன்று ஏற்பட்டதுடன் எதிர்காலத்தில் அதனை சரியான திகதிக்கு முன்னர் கிடைக்க செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2 வருமானங்கள் பெறுவனவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வருடாந்த திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் தனியார் மரப் போக்குவரத்து வருமானக் குறியீடு தொடர்பாக ரூபா 110 மில்லியன் இற்கான அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் ஒன்றினை சேகரிப் பதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 104.79 மில்லியனிற்கான தேறிய வருமானம் ஒன்றினை சேகரித்திருந்தது. அதன் காரணமான வருமான எல்லையை நெருங்காமை ரூபா 5.21 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அவை 4.73 சதவீதத்தினால் குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 128(2) பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் சரியான வருமான மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் உரிய விதத்தில் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், 2015 ஜுலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கடைபிடித்து வருமான நிருவாகத்தை மிகவும் வினைத் திறனுடன் நிறைவேற்றப்பட வேண்டும். | நூற்றுக்கு நூறு வீதம் சரியாக எதிர்வு கூறல் இயலாது எனவும் ஆண்டின் போது விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் முன்னைய ஆண்டின் போது அறிந்து கொள்வதற்கு முடியாது எனவும். |
| (ii) | அரசாங்க காடுகளில் இருந்து கிடைக்கக் கூடிய வருமானக் குறியீடு தொடர்பாக ரூபா 1,800 மில்லியனிற்கான வருடாந்த வருமானம் ஒன்றினை சேகரிப் பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,906.61 மில்லியனிற்கான தேறிய வருமானம் ஒன்றினை சேகரித்திருந்தது. எனவே வருமான எல்லையை மிகைத்தல் ரூபா 106.61 மில்லியன் தொகை காணப்பட்ட துடன் அவை 5.92 சதவீதத் தினால் அதிகரித்திருத்தல் என அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | வனவியல் பொருட்களை அகற்றும் கட்டணம், அரச காடுகளுக்கு உட்புகுதல் கட்டணம் வெளியீடுகள் விற்பனை, கன்றுகள் விற்பனை, பய்னஸ் மரங்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் ஏனைய வருமானங்கள் சேகரிக்கப்படுவதுடன் அவ் வருமானங்கள் குறிப்பிட்ட ஆண்டிற்கும் முன்னர் எதிர்வு கூறுவதற்கு முடியாதுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடந்த 03 வருடங்களில் மேற் கூறிய 02 வருமானக் குறியீடுகள் தொடர்பாக மொத்த நிலுவை வருமானங்கள் வருமானம் முறையே ரூபா 2.32 மில்லியன் தொகை மற்றும் ரூபா 410.20 மில்லியன் தொகை ஆகக் காணப் பட்டதுடன் வருட இறுதியில் மேலும் காணப்பட்ட நிலுவைத் தொகை முறையே ரூபா 0.55 மில்லியன் தொகை மற்றும் ரூபா 125.44 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர் செயற்பட வேண்டி இருந்ததுடன், செயற்படுவதை அசட்டை செய்யும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனக் கோவையின் XLVII அத்தியாயத்தின் பிரிவுகள் 8.1 மற்றும் 8.2 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தனிப்பட்ட மரப் போக்குவரத்து வருமான குறியீடு தொடர்பாக ரூபா 0.55 மில்லியன் இற்கான நிலுவைத் தொகை அனுமதிப் பத்திரங்களை காலம் நீடிக்கப்படாமையினால் ஏற்பட்டுள்ளது எனவும் அரசாங்க காடுகளில் இருந்து கிடைக்கும் வருமான குறியீட்டிற்கு உரிய நிலுவைத் தொகையுள்ள ரூபா 125.15 மில்லியன் தொகை அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய உரிமை மூலதனப் பங்கில் நிலுவைத் தொகை ஆகும். மீதி அனுமதிப் பத்திரதாரர் நிறுவனங்கள் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காமையினால் நிலுவையாகியுள்ளவை எனவும். |

### 1.6.3 வருமானம் அல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 20.48 மில்லியனாகக் காணப்பட்டது. | நிதிப் பிரமாணங்கள் 373(1) இன் பிரகாரம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி அத் திகதியே திறைசேரி யின் அரச கணக்குப் பகுதிக்கு அனுப்பப்பட வேண்டும். | 2019 ஜனவரி 02 திகதி கட்டுநிதி மீதி திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மூன்றாம் தரப்பினருக்கு திருப்பி செலுத்துவதற்காக தற்காலிக மாக பிடித்து வைக்கும் வைப்புக்கள் பெறுவனவுகள் ரூபா 477.37 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அவை மொத்த வைப்புக்களில் 53.38 சதவீதமாகும். | மூன்றானம் தரப்பின ருக்கு அறிவூட்டி உரிய கருமங்கள் முடிவடைந்திருந்தால் வைப்புக்களைத் திருப்பி செலுத்து வதற்கு நடடிவக்கை எடுக்க வேண்டும். | வேலைகள் பூர்த்தி செய்யப்படாத செயற் திட்டங்களின் பணம் வைப்புக் கணக்கில் வைத்திருக்க வேண்டியுள்ளது. |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் மீதான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதி ரூபா 215.56 மில்லியன் தொகை என குறிப்பிடப்பட்டிருந் ததுடன் முன்னைய ஆண்டின் போது அம்மீதி ரூபா 215.70 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன் பிரகாரம் ஆரம்ப மீதிகளிடையே ரூபா 0.14 மில்லியன் இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை பரிசோதனை செய்து சரிசெய்ய வேண்டும். | தொழுவ பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரின் கடன் மீதி இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. |
| (ii) | இணக்கக் கூற்றின் பிரகாரம் திணைக்கள ஏடுகள் மற்றும் திறைசேரியின் கணினி அச்சுப் பதிவு இறுதி மீதிகள் முறையே ரூபா 211.79 மில்லியன் தொகை மற்றும் ரூபா 211.58 மில்லியன் தொகை காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 0.21 மில்லியன் தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | பரீட்சை திணைக்களம் (தலைப்பு 212) தவறுதலாக ரூபா 0.21 மில்லியன் தொகை செலவு வைத்துள்ளது. |

**1.6.5 வைப்புக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு பிணை வைப்பு மீதி ரூபா 377.83 மில்லியன் தொகை காணப்பட்டது. அவற்றில் ரூபா 74.39 மில்லியன் தொகைக்கான வைப்புக்கள் 05 வருடங்களும், ரூபா 183.56 மில்லியன் தொகைக்கான வைப்புக்கள் 02 வருடங்களும் மிகைத்துள்ள வைப்புக்கள் என அவதானிக்கப்பட்டது. | நி.பி.571(2) இன் பிரகாரம் காலம் கடந்துள்ள வைப்புக் கள் உரிய வைப்பாளர் களிடம் விசாரணை செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். | தனியார் வனவளர்ப்பு களின் கீழ் பிணை வைப்புக்கள் 30 வருட செயற்திட்ட காலம் முடிவடையும் வரை தடுத்து வைக்க வேண்டியுள்ளதெனவும் ஏனைய பிணை வைப்புக்களின் ரூபா 0.47 மில்லியன் தொகை 2019/05/10 திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிடுள்ளது. |
| (ii) | மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கும் வைப்பு மீதி ரூபா 38.19 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 7.31 மில்லியன் வைப்புக்கள் 05 வருடங்கள் மற்றும் ரூபா 4.59 மில்லியன் தொகைக்கான வைப்புக்கள் 02 வருடங்களை மிகைத்துள்ளது. | - மேற்படி - | இரண்டு வருடங்கள் மற்றும் ஐந்து வருடங் களை மிகைத்திருந்த போதிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் தொடர்பான பணம், வைப்புக் கணக்கில் பேணப்பட வேண்டியுள்ளது. |

### 1.6.6 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் நடைமுறை அல்லாத சொத்துக் களின் இறுதி மீதி ரூபா 926.18 மில்லியன் தொகை ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அதன் ஆரம்ப மீதி ரூபா 798.25 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் ரூபா 127.93 மில்லியன் இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியிடையே வித்தியாசத்தை தீர்க்க வேண்டும். | ஆரம்ப மீதியில் தவறுதலாக நேரிட்டுள்ளதுடன் ரூபா 926.18 மில்லியன் தொகை என எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு இனங்கண்டிருந்த சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தியிருக் காததுடன் மீளாய்வாண்டின் போது தனதாக்கியவைகள் மற்றும் கைதவிர்ப்பு செய்யப்பட்டவை களும் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நடைமுறை அல்லாத சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்த வேண்டி இருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டம் நாளது வரை ஆக்கப்பட வேண்டும். | சொத்துக்களை சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 1.6.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் அதனது 11 ஆவது பிண்ணிணைப்பு பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் அதன் 11 பிண்ணினைப்பு பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் பேணப்பட வேண்டும். | அரச கணக்கு சுற்றறிக்கை 267/2018 ஆம் இலக்க மூலம் வழங்கியிருந்த பொதுவான அறிவுரைகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணுவது கட்டாயம் அல்ல என அறிவித்துள்ளது |
| (ii) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக் களை தொடர்ச்சியாக பரிசோதனை செய்யக் கூடிய விதமாக பொறுப்புக்கள் பதிவேட்டில் அந்த பொறுப்புக்களை பதிவு செய்ய வேண்டும். | திணைக்களத்தில் போதியளவு கட்டுநிதி காணப்படுவதினால் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய தேவை ஒன்று காணப்படவில்லை. |

**1.6.8 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வ மான உள்ளகக் கணக்காய்வு முறையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையினை ஆக்கபூர்வத் தன்மை தொடர்ச்சியான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமை யினை பயன்தரும் விதத்தில் நடாத்திச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் நடாத்தப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி ஒன்று அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.9 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 104(3) மற்றும் 104(4) | கணக்கிட முடியாது | ஆரம்ப மற்றும் பூரணமான அறிக்கை சமர்ப்பிக்காத அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத 10 சேதங்கள் மீளாய்வாண்டின் போது அறிவித்திருக்கவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் முழுமையான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(2) | கணக்கிட முடியாது. | பிணை வைப்புக்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு திருப்பி செலுத்துவதற்காக தற்காலிகமாக பிடித்து வைக்கும் வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தின் வேலைகள் முடிவடையும் வரை வைப்புப் பணம் பிடித்து வைக்க வேண்டும். |
| (iii) நி.பி. 396(ஈ) | 1,771,496 | வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 177 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்பட வெண்டும். | வங்கி இணக்கக் கூற்று தயாரித்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் சீராக்கம் மேற்கொள்ளல் தாமதமாகியதுடன் எதில் காலத்தில் இந்த |

நிலையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையினை இனங்காணாமல் ஏற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் திட்டமிட்டுள்ளவாறு வேலைகள் நிறைவேற்றப் படாமை ஆகிய காரணங் களினால் 04 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 496.33 மில்லியனில் ரூபா 68.39 மில்லியன் அதாவது 7.5 முதல் 20.64 வரை வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஒட்டுமொத்த செலவு விகிதாசாரம் 95 சதவீதமாக இருந்ததுடன் 20 மீண்டுவரும் செலவு விடயங்களில் 16 இலும் சேமிப்புக்கள் 5 சதவீதத்தை விட குறைவாகக் காணப்பட்டது. |
| (ஆ) | 02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக நி.பி.66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 135.70 மில்லியன் ஏற்பாடுகளில் ரூபா 67.35 மில்லியன் தொகை அதாவது 18.29 சதவீதம் முதல் 51.33 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | ஏற்பாடுகளின் தேவையை உரிய முறையில் இனங் கண்டு போதியளவு ஏற்பாடுகளை மாத்திரம் மாற்ற வேண்டும். | தேவைக்காக மாத்திரம் நி.பி.66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றப்பட்ட போதிலும் மேற்கூறிய 02 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |

**2.2 வங்கி கணக்குகள் நெறிப்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 70,651 இற்கான மீதியொன்று நிதிக் கூற்றுக்களில் மிகையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் மிகையாக பதிவு செய்துள்ள மீதிகளை சரிசெய்ய வேண்டும். | 06 மாதங்களை விட மிகையான காலம் கடந்துள்ள காசோலை களுக்கு பதிலாக 05 மாதங்களை விட மிகை யான காலம் கடந்துள்ள காசோலைகளின் பெறுமதி 03 வங்கிக் கணக்குகள் பதிவு செய்யப்பட்டிருத்தல். |
| (ஆ) | வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு மீதிகள் முறையே ரூபா 24.57 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1.13 மில்லியன் தொகை எனக் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த மீதிகள் 06 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரை காலவீச்சில் காணப்பட்டது. | உரிய மீதிகளை இனங்கண்டு சீராக்கல் செய்ய வேண்டும். | 2018.12.31 திகதியில் உள்ளவாறு இனங்காணப் படாத பெறுவனவுகளில் ஒரு பகுதியை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மீதி இனங்காணப்படாத பெறுவனவுகள் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கைதொழில்சார் வனப் பயிர் செய்கை நிறுவுதல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் கருமத்திற்கான ஏற்பாடுகள் ரூபா 325 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த கருமத்தின் கீழ் மீள் வனப் பயிர் செய்தல், வாணிபம் சார் பரப்புதல் மற்றும் வெட்டிய பின்னரான சேவைகளின் இலக்குகள் முறையே 956.2 ஹெக்டயர்கள், 701.49 ஹெக்டயர்கள் மற்றும் 1385.21 ஹெக்டயர்கள் நிறைவேற்றப் பட வேண்டி யிருந்தது. செயலாற்றுகை அறிக்கையின் படி அந்த கருமங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள எண்ணிக்கை 951.70 ஹெக்டயர், 695.78 ஹெக்டயர் மற்றும் 926.52 எண்ணிக்கை தொகையாகும். | இலக்குகளை நெருங்குவதற்கு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

**3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அண்டு முடிவடைந்து 150 நாட்களுள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த அறிக்கை 2019 மே 31 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 அம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப் படவில்லை. |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | விஷேட இன எல்லைத் தூண்கள் உற்பத்தி செய்வதற்கு பய்பர் அச்சுகள் அக்குரஸ்ஸயில் இருந்து திருகோணமலை பெரும்பாக வன அலுவலகத்திற்கு உற்பத்தி செய்து எடுந்து வந்து கொடுப்பதற்காக ஒன்று ரூபா 14,000 வீதம் 70 அச்சுக்களுக்காக ரூபா 980,000 தொகை பெறுகைக்கான அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அங்கீகாரத்திற்கு புறம்பாக மேலும் 140 பய்பர் அச்சு களுக்காக ரூபா 1,960,000 தொகை செலவிடப் பட்டிருந்தது. | பெரும்பாக வன அலுவலகத்தின் பெறுகை அங்கீகாரம் வரையறையாகிய ரூபா 1,000,000 ஆக காணப்பட்டதுடன் அந்த வரையறையுள் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பெறுகை நடைமுறையில் மீறல் ஒன்று ஏற்பட்டிருந்த துடன் இந்த நிலைமையை எதிர்காலத்தில் தவிர்ந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | அனுராதபுர பெரும்பாக வன அலுவலகத்தினால் விஷேட இன எல்லைத் தூண் ஒன்று ரூபா 1,100 வீதம் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த துடன் அந்த விலைக்கு திருகோணமலை பெரும்பாக வன அலுவலகத்திற்கு தேவையான எல்லைத் தூண்கள் 23,000 இனை ரூபா 25,300,000 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு இயலுமாக இருந்தது. ரூபா 27,465,050 செலவிடப்பட்டு எல்லைத் தூண்கள் உற்பத்தி செய்திருந்தமையால் ரூபா 2,165,050 பண நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகைகள் மேற் கொள்ளும் போது பண நட்டமொன்று ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த நிலைமையை குறைப்பதற் காக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திருகோணமலை பெரும்பாக வன அலுவலகத்தின் பெறுகை அங்கீகாரத்தின் பிரகாரம் வழங்குனருக்கு விஷேட இன எல்லைத் தூண்கள் 23,000 தொகை ரூபா 1,299,750 தொகை பெறுமதிக்கு 06 மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருந்த போதிலும் 17,390 தொகை எல்லைத் தூண்கள் மாத்திரம் எடுத்து வரப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,525,025 தொகை செலவிடப்பட்டிருந் தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட செலவை விட ரூபா 225,275 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையுள் செயற்பட வேண்டும். | அந்த தொகைக்கு எடுத்து வர முடியாது என ஒப்பந்தக்காரர் அறிவித்திருந்ததினால் தூரத்தை அலகு என அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 25,000 விட குறைவான 27 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 205,699 தொகையும், ரூபா 25,000 விட மிகையான 58 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 17,309,769 தொகை என்பன 2018 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்காததுடன் அவற்றில், ரூபா 5,308,195 தொகைக்கான நட்டம் ஏற்பட்டிருந்த 42 சம்பவங்கள் நடைபெற்று 10 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்தல் மற்றும் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலம் கடந்துள்ள சம்பவங்கள் ஆதலால் விவரங்கள் பெறுவது கடினம் நட்டங்கள் சேதங்களை குறைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நடைபெற்றிருந்த 05 சேதங்கள் தொடர்பான ரூபா 401,502 தொகையினை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தி யிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இந்த சேதங்கள் 2019 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அனுப்பாமை

| கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான விபரம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு அனுப்பப் பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2019 மார்ச் 31 திகதி வரை பதில் அனுப்பி யிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்புதல் வேண்டும். | 2019 ஜுலை 30 அளவில் பதில் அனுப்பப்பட்டது. |

### 3.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் சேவையை பெற்றுக்கொள்ளாத 05 மாத காலப்பகுதிக்காக ரூபா 395,620 இற்கான மொத்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்குறிப்பிட்ட காலப் பகுதியில் அவர் சேவையை வறிதாக்கியுள்ளார் எனக் கணிக்கப் பட்டிருந்தது. | பகிரங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை மற்றும் ஏற்பாடுகள் தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பகிரங்க சேவை ஆணைக் குழுவின் தீர்மானத்தின் படி நிலுவைப் சம்பளத்துடன் மீண்டும் சேவையில் நிறுவுவதற்கான கட்டளையிடப்பட்டிருந்த மையால் அதன் படி நிலுவை சம்பளம் செலுத்தப்பட்டது. |
| (ஆ) | தனியார் கம்பனி ஒன்றினால் மொனறாகலை மாவட்டத்தில் 2012 ஜுன் மாதம் அங்கீகாரம் இன்றி மா பயிர்செய்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த கம்பனி 05 மாத காலப் பகுதியில் இந்த காணியை 06 ஹெக்டயர் முதல் 200 ஹெக்டயர் வரை விரிவாக்கி இருந்தது. | வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20(1) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெரும்பாக வன அலுவலக ஊழியர் இது தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய 06 உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்கூறிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் இந்த செயற்திட்டத் திற்கான மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் பரிந்துரை பெற்றிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரை பெறப்பட வேண்டும். | சுற்றாடல் பரிந்துரை பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | மா செயற்திட்டம் தொடர்பாக நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிற்காக 2016 ஏப்ரல் 22 திகதி நீதி மன்றத்தினால் வெளியேற்றுதல் கட்டளை வழங்கியிருந்த போதிலும் வனவள பாதுகாப்பு நாயகத்தினால் காணிக்கு முக்கூட்டுவழி மின்சாரம் பெறுவதற்காக எதிர்ப்பு ஒன்றும் இல்லை என கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | சட்ட நடைமுறை களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். | சட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மின்சாரம் பெறுவதனை அங்கீகரித்திருந்ததாக |
| (உ) | 02 வாகனங்கள் விபத்து தொடர்பாக ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 582,130 உரிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்டத்தை உரிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நட்டஈடு பெறுவதற்காக சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கந்தளாய் அடவி வனவள அலுவலகத்திற்கு செல்லும் நுழை பாதையில் வடிகால் முறைமை (90 மீற்றர்கள்) மற்றும் பக்கச் சுவர் (70 மீற்றர்கள்) தயாரிப்பதற்காக ரூபா 1,145,022 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வடிகால் முறைமை பாதையை விட உயரமாக அமைந்திரு ந்ததால் மழைநீர் பாய்ந்து ஓடுவது நடைபெறவில்லை என அவதானிக்கப்பட்டது. | வடிகால் முறைமைக்கு நீர் பாய்ந்து ஓடுவதற்கு வசதியாக முறையில் தயாரிக்க வேண்டும். | வடிகால் முறைமை பாதையை விட உயரத்தில் காணப்பட்ட போதிலும் பாதை மண் நிரப்பி தயாரிப்பதனால் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளலாம். |
| (எ) | மீளாய்வாண்டின் போது அனுராதபுர அடவியில் கருங்கல் அனுமதிப் பத்திரம் பெற்றோர் 06 பேர்களிடம் புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் மிகையாக உடைத்து அகற்றப்பட்டிருந்த 1,057 கியூப் கருங்கற்கள் தொடர்பாக தொடர்ந்தும் அறவிடப்படாத தொகை ரூபா 618,630 தொகை காணப்பட்டது. | புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் அறிக்கையை அடிப்படையாக வைத்து நிலுவை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இந்த அனுமதிப்பத்திர தாரர்களுக்கு நிலுவை கட்டணத்தை செலுத்தும் படி அறிவித்துள்ளதாக வும் செலுத்தாவிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது அனுமதிப் பத்திரதார்கள் 113 பேரிடமிருந்து மணல் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யும் போது ரூபா 1,251,000 இற்கான நிலுவை முத்திரைக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | 1789/09 ஆம் இலக்க மற்றும் 2012 திசெம்பர் 17 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் அறிவுரையின் பிரகாரம் நிலுவை முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இது வரை ரூபா 187,000 இந்கான நிலுவை கட்டணம் அறவிடப்பட் டுள்ளதாகவும் அனுமதிப் பத்திரதாரர்களின் பிணை வைப்புக்களில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | அனுராதபுரம் பெரும்பாக வன உத்தியோகத்தரின் அனு/தி.வ.நி/விமர்சன/2018 மற்றும் 2018 அக்தோபர் 29 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பல்வேறு தரப்பினரின் உதவியைப் பெற்று அள் ஒருவர் அரச காணி போலி பதிவேடுகளைப் பயன்படுத்தி பாரிய அளவிலான காணி மோசடிகள் மேற்கொண்டிருந்த துடன் மொத்தமாக அவற்றின் பணப் பெறுமதி சுமார் ரூபா 2,000 மில்லியன் ஆக காணப்பட்டது. | அரச காணிகளின் முகாமைத்துவம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சட்ட ஆலோசனை பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஒ) | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத் துவ செயற்திட்டத்தின் மூலம் 2018 மார்ச் 10 திகதி கஹடகஸ்திகிலிய அடவியில் 194 ஆம் இலக்க குருநாகல் குடியேற்ற சமூக அடிப்படை அமைப்புக்கு வழங்கியிருந்த நீர் வடிகட்டல் இயந்திரம் (Ro Plant) மீளாய்வாண்டு இறுதி வரையும் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கியிருக்க வில்லை. | விரைவாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் வடிகட்டும் இயந்திரம் விரைவாக பொருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஓ) | கம்புறுபிட்டிய மற்றும் தெனியாய அடவி வன அலவலகங்களில் 2019 ஆண்டின் போது பதிவு செய்தலை புதுப்பிக்காத மர வியாபாரங்களில் இருந்து முறையே ரூபா 416,700 தொகையும், ரூபா 86,000 இற்கான நிலுவை கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | மர வியாபாரத்தை பதிவு செய்யும் அலுவல்களை விரைவுபடுத்த வேண்டும். | பதிவு செய்யப்படாத மர வியாபாரங்களை இரத்துச் செய்வதற்கும் ஏனைய மர வியாபாரங்கள் உரிய காலத்தில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஔ) | 1995 தேசிய வனப் பரப்புக் கொள்கையின் கீழ் மரம் அல்லாத வனம்சார் உற்பத்திகளை பிரதானமாகக் கொண்ட கைத்தொழில்கள் உட்பட வனவியல் | 1995 தேசிய வன பரப்புகள் கொள்கை மற்றும் பாரிய திட்டம் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்காததுடன் எதிர்காலத்தில் பதவியணி திருத்தங் களின் மூலம் இதற்காக தனியார் பிரிவு |

| | | |
|---|---|---|
| கைத்தொழில்கள் ஆரம்பித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல், மேம்படுத்துவதற்காக நிதி நிறுவனங்கள் மற்றும் அமைச்சு இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நிதி வசதிகளை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | ஒன்று ஏற்படுத்தி செயற்படுத்து வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் நெருங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் 15 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பாக குறிக்கோள்களை இனங்கண்டு இலக்குகள் மற்றும் அதனை அளவீடு செய்வதற்கான அடிப்படை தரவுகளை இனங்கண்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தரையின் சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல், தாபித்தல் நிலைபேறாக பயன்படுத்தலை மேம்படுத்தல், வனங்களை நிலைபேறாக முகாமைப்படுத்துதல், உயிரியல் பல்வகைமை அழுகுவதை தடுத்தல் ஆகிய குறிக்கோள்கள் 2030 ஆண்டு வரை இலங்கை வன உள்ளடக்கம் 32 சதவீதம் வரை உயர்த்துவதற்காக இலக்காகக் கொண்டிருந்தது. எனினும் திணைக்களத்தின் 2017 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் உள்ளடக்கம் 35.1 சதவீதம் வரை வளர்ச்சியிடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | இந்த இலக்குகாகிய குறிக்கோள்கள் நிகழ்காலத்தின் படி மாற்றப்பட வேண்டும். | கூகுள் செயற்கை கோள் படங்களை பயன்படுத்தி on screen digitizing முறைக்கு வன உள்ளடக்கம் 35.21 சதவீதம் என இனங்கண்டிருந்ததுடன் அந்த தேசப் படங்களை வெளியிடாமல் மீண்டும் வன உள்ளடக்கம் வேறு செய்முறை ஒன்றின் மூலம் அளவை செய்யப் பட்டதெனவும் அதன் பிரகாரம் வள உள்ளடக்கம் 29.3 சதவீதம் என கண்டறியப்பட்டது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட 590 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடமாவதற்கு காரணம் சேவையை விட்டு விளகுதல் சேவையை வறிதாக்கல், சேவை இடைநிறுத்தல், ஓய்வு பெறல், இறத்தல் ஆகியவையே. |